S.No. 2031 RLCT 4

(For candidates admitted from 2010–11 onwards)

U.G. DEGREE EXAMINATION, APRIL 2016.

Part I — தமிழ்

செய்யுள் (பண்டைய இலக்கியம்) இலக்கிய வரலாறு,
பொதுக்கட்டுரை

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. குறுந்தொகை நூலை தொகுத்தவர்?

2. நற்றிணையை தொகுப்பித்தவர் யார்?

3. கலித்தொகையின் அடியெல்லை யாது?

4. நெடுநல்வாடை – பாட்டுடைத் தலைவன் யார்?

5. அக நானூற்றை தொகுத்தவர்?

6. புறநானூற்றுப் பாடல் பாடிய பெண்பாற் புலவர்கள் இருவர் பெயரைக் குறிப்பிடுக.

7. திருக்குறள் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது?

8. நாலடியாரின் வேறுபெயர்கள்?

9. எட்டுத்தொகை நூல்களுள் அகநூல் இரண்டைக் குறிப்பிடுக.

10. நாலடியார் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்குளுக்கும் விடை தருக.

11. (அ) 'ஆர்கலி மிதித்த' எனும் குறுந்தொகை பாடலின் கருத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'நிலத்தினும் பெரிதே' எனும் குறுந்தொகை பாடலின் கருத்தை எழுதுக.

12. (அ) பாலைக்கலிப்பாடலின் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிக்கலிப்பாடலின் கருத்துக்களை விளக்குக.

13. (அ) ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) புறநானூற்றில் கையறுநிலை பாடலை விவரி.

14. (அ) திருக்குறளில் 'வாய்மை' எனும் அதிகாரத்தின் சிறப்புக்களை கூறுக.

(அல்லது)

(ஆ) 'நல்லினம் சேர்தல்' பற்றி நாலடி கூறும் கருத்தை விளக்குக.



15. (அ) 'சிறியார் இனமாய் ஒழுகுதல்' என பழமொழி நானூறு கூறும் கருத்து யாது?

(அல்லது)

(ஆ) 'பழி அஞ்சாமை' பற்றி பழமொழி நானூறு பாடல் வழி விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. குறுந்தொகைப் பாடல்களின் கருத்துக்களை தொகுத்தெழுதுக.

17. புறநானூற்றுப் பாடல் கருத்துக்களை தொகுத்துரைக்க.

18. நாலடியார் அறக்கருத்துக்களை விவரி.

19. சங்க இலக்கியத்தின் சிறப்புக்களை விளக்குக.

20. 'சுத்தம் சுகாதாரம்' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.

---

18. கர்ணன் சல்லியன் இருவருக்கும் இடையே நடந்தவற்றை விளக்குக.

19. ஜன்மா நாடகத்தின் கருத்தை விளக்குக.

20. நாடக இலக்கியம் குறித்துக் கட்டுரை வடிவில் விடை தருக.

---



**S.No. 8539** **RLCT 3**

(For candidates admitted from 2010–2011 onwards)

U.G. DEGREE EXAMINATION, NOVEMBER 2015.

Part I — Tamil

செய்யுள் (காப்பியங்கள்) நாடகம், இலக்கிய வரலாறு

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. மதிலின் மீது கட்டப்பட்டிருந்த கொடி கோவலன், கண்ணகியரைப் பார்த்து எவ்வாறு கையசைத்தது?

2. வயந்த மாலையின் தோழி யார்?

3. அந்தணச் சாதிப்பாம்பு எவ்வாறு மணக்கும்?

4. வாயுவின் மகன் யார்?

5. உணவு சமைக்க விறகு இல்லையே என வினவிய மனைவிக்கு மாறனார் எவ்வாறு விறகு வழங்கினார்?

6. எவ்வாறு போர் புரியமாட்டேன் என அர்ச்சுனன் கூறினான்?

7. விருந்தினர்க்கு உணவு உண்ட பின் நபிகள் நாயகம் யாது வழங்கினார்?

8. தேவகுமாரன் இராயப்பரிடம் கூறியது யாது?

9. தமிழ்நாடகத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

10. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை?

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) கோசிகன் கோவலன் தானா என உறுதிப்படுத்த மேற்கொண்ட உத்தி யாது?

(அல்லது)

(ஆ) மணிமேகலை ஏன் பனிக்கறை புகுந்தாள்?

12. (அ) அரம்பை போன்ற அழகியின் நடனச் சிறப்பை எழுதுக.

(அல்லது)

(ஆ) தூதாகச் சென்ற அங்கதன் தன்னை இராவணனிடம் எவ்வாறு அறிமுகப்படுத்தினான்?



13. (அ) யுதிட்டிரன் கண்ணபிரானை எவ்வாறு பாராட்டினான்?

(அல்லது)

(ஆ) விருந்துக்கு வந்தவர்களை நபிகள் நாயகம் எவ்வாறு உபசரிக்கிறார்?

14. (அ) மேனியைத் துளைத்த கூரிய ஆணிகள் என்ற பகுதி உணர்த்தும் கருத்து யாது?

(அல்லது)

(ஆ) ஜன்ம நாடகத்தின் மையக்கரு யாது?

15. (அ) காப்பிய இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) மணிமேகலை காப்பியம் – குறிப்பு வரைக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

16. கோவலனும் கண்ணகியும் புறஞ்சேரிக்கு எவ்வாறு, எப்பொழுது சென்றனர்? அங்கு நடந்தது யாது?

17. சீவக சிந்தாமணியில் இடம் பெறும் பல்லவ நாட்டின் எழிலைப் புலப்படுத்துக.

18. விருந்தூட்டுப் படலம் வழி உமறுப்புலவர் வெளிப்படுத்தும் விருந்துச் செய்தியை விளக்கி எழுதுக.

19. அம்பையின் பாத்திரப் படைப்பை ஆராய்க.

20. ஐம்பெருங் காப்பியங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

———————



S.No. 9054 RLCT 3

(For candidates admitted from 2010–11 onwards)

U.G. DEGREE EXAMINATION, APRIL 2017.

Part I — Tamil

செய்யுள் (காப்பியங்கள்), நாடகம், இலக்கிய வரலாறு

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கோவலன் பாணர்களிடம் வினவியது யாது?

2. பட்டத்து யானையின் பெயர் என்ன? அதனை அடக்கியவன் யார்?

3. கன்னியைக் கடித்த நாகத்தின் பற்கள் எத்தனை? அவற்றின் பெயர்களை எழுதுக.

4. மாறனாரின் திருத்தொண்டினை உலகிற்கு அறிவிக்கத் தில்லை நடராசப் பெருமான் செய்தவைகளை எழுதுக.

5. "நன்றே என் தவப்பயன்" என்று கூறியவள் யார்? ஏன்?

6. வாய் கை பூசி மகிழ்ந்த பின், உவந்து அளித்தவை எவை?

7. பிலாத்துவின் முன்னிலையில் இயேசுவின் மேல் மூப்பர்கள் சுமத்திய குற்றங்கள் யாவை?

8. பீஷ்மர் கூறும் போர்த் தருமங்களுள் எவையேனும் இரண்டினை எழுதுக.

9. பெரிய புராணம் – குறிப்பு வரைக.

10. கூத்தின் வகைகளை எழுதுக.

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளி.

11. (அ) கோசிகன் கோவலனிடம் 'மாசு அற உரைத்த' செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சுதமதி உள்ளம் வருந்தி உதயகுமரனுக்கு உரைத்த அறிவுரைகளை எழுதுக.

12. (அ) சீவகன் செவியில் சுதஞ்சணன் செப்பிய மந்திரங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) அங்கதன் இராவணனிடம் கூறியவைகளை எழுதுக.



13. (அ) கண்ணன் அருச்சுனன் மேல் நாகக்கணையை ஏவிய நிகழ்ச்சியை எழுதுக.

(அல்லது)

(ஆ) விருந்து சொல்க என்று நபிகள் கூறியதையும் விருந்துக்கு வருக என்று அலி றலி அல்லாகு அன்கு அழைத்ததையும் எழுதுக.

14. (அ) 'தாயும் சேயும்' என்ற பகுதி வழி அறியலாகும் திருமாதாவின் துயரினை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாடகக் கூறுகள் 'ஜன்மா' நாடகத்தில் அமைந்துள்ள திறத்தினை எழுதுக.

15. (அ) ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோரின் நாடகத் தொண்டினை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் வழி நடந்த வருத்தம் நீங்கி, மதுரை மாநகரின் புறஞ்சேரியை அடைந்த விதத்தினை எழுதுக.

17. 'நாடு காணச் செல்வேன்' என்று கூறிய சீவகனுக்குச் சுதஞ்சணன் கூறிய வழியின் தன்மைகளை விளக்கி எழுதுக.

18. திருக்குடும்பத்தினர் மலர்ச்சுனைக்குச் சென்ற நிகழ்ச்சியைத் தொகுத்துரைக்க.

19. சங்கமுனி சாபத்தையே விமோசனமாகக் கருதிய பாங்கினைப் புலப்படுத்துக.

20. தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

---



S.No. 3060 16 LCT 3

(For candidates admitted from 2016–2017 onwards)

U.G. DEGREE EXAMINATION, NOVEMBER 2017.

Part I — Tamil

காப்பியமும் நாடகமும்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. கோவலன் யானையின் மீது அமர்ந்திருந்த காட்சி எவ்வாறிருந்தது?

2. காயசண்டிகை என்பவள் யார்?

3. குகன் தன் படைத் துணைவரான வேடருக்கு இட்ட கட்டளை யாது?

4. ‘பொய்க்குமோ? பொய்யாதே!’ – என உலூக முனிவன் கூறியது யாது?

5. ‘செந்தீ மேல் எழும் பொழுது செம்மலர் மேல் வந்து எழுந்த அந்தணன் போல் தோன்றினார்’ – யார்?

6. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்?

7. தேவந்திகை கேட்ட வரம் எது?

8. துங்கமுனிவர் இட்ட சாப விமோசனம் என்ன?

9. ஆற்றுப்படை என்றால் என்ன?

10. சோழர் காலத்தில் தோன்றிய காப்பியங்கள் யாவை?

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் இரண்டுபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கவுந்தியடிகள், மாதரியிடம் கண்ணகியை அடைக்கலப்படுத்திய நிலையை விளக்குக.

(அல்லது)

(ஆ) சீவகனைக் கண்ட விசயையின் நிலை எத்தகையது? விளக்குக.

12. (அ) குகனது தோற்றச் சிறப்பியல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாண்டவர் உலூக முனிவனைத் தூது அனுப்பிய பாங்கினைப் புலப்படுத்துக.



13. (அ) சிதம்பரத்தின் எல்லையை அடைந்த நந்தனாரின் நிலை எத்தகையது? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஈத்தங்குலையை வரவழைத்த நிகழ்வினை நும் பாடப்பகுதி வழி நின்று விளக்குக.

14. (அ) கனியை உண்ட சங்க முனிவர் மாற்றம் பெற்று உரைத்தனவற்றைச் சுட்டிக் காட்டுக.

(அல்லது)

(ஆ) தேவந்திகையைக் கண்ட சங்க முனிவர் வர்ணித்த பாங்கினை எழுதுக.

15. (அ) 'குறவஞ்சி' சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது என்பதற்கான காரணங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இரட்டைக் காப்பியங்கள் குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை அளவில் விடையளிக்க.

16. சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிய நிகழ்வினை மணிமேகலை வழி நின்று விளக்குக.

17. உலூக முனிவன் தூது உரைத்தலும் துரியோதனன் விடை கூறியதும் பற்றி எடுத்துரைக்க.

2019 - 2020

S.No. 2062 II year. **16 LCT 4**

(For candidates admitted from 2016–2017 onwards)

U.G. DEGREE EXAMINATION, NOVEMBER 2019.

Part I — தமிழ்

பண்டைய இலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. "புகையுண் டமர்த்த கண்ணன் ..." என்ற அடி இடம்பெறும் சங்க இலக்கிய நூல் எது? ஆசிரியர் யார்?

2. "அகவன் மகளே...." எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் எத்துறை சார்ந்தது?

3. மாமலர்... எனத் துவங்கும் கலித்தொகைப் பாடல் எத்திணை சார்ந்தது? சிறுகுறிப்பு தருக.

4. 'ஆற்றுப்படை' – விளக்குக.

5. அகநானூற்றுப் பாடலைத் தொகுத்தவர் யார்?

6. பாடாண் திணை – குறிப்பு வரைக.

7. 'குன்றின் அனையாரும் குன்றுவர்' – இவ்வடி இடம்பெறும் அறநூல் எது?

8. ‘நாலடியார்’ — சிறுகுறிப்பு தருக.

9. ஆற்றுப்படை நூல்கள் எவை?

10. வாழ்வில் பின்பற்ற வேண்டிய இரு அறங்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மகட்போக்கிய தாய் புலம்பலைக் குறுந்தொகைப் பாடல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) “நின்ற சொல்லர்...” என்று துவங்கும் நற்றிணைப் பாடற்கருத்தை விளக்குக.

12. (அ) ஓரங்க நாடக பாணியில் அமைந்த கலித்தொகைப் பாடல் ஒன்றை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நல்லியகோடனின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

13. (அ) “நோகோ யானே....” என்ற அகநானூற்றுப் பாடற்கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) கோவூர்கிழார் பாடல்வழி அறியலாகும் பரிசிலரின் தன்மை, பண்புகள் பற்றி எழுதுக.



14. (அ) “மானம்” குறித்த குறட்கருத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாலடியார் கூறும் கருத்துகளை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

15. (அ) சங்க அகநூல்கள் பற்றிக் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ‘மொழி உணர்ச்சி’ — விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

16. ஐங்குறுநூற்றுத் தலைவி இரங்கு பத்து – பாடற் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

17. ஆற்றுப்படை இலக்கணத்தைச் சிறுபாணாற்றுப்படை வழி விவரிக்க.

18. புலவரின் வாழ்வும், உரிமையும் பற்றிப் புறநானூற்றுப் பாடல்களின் வழி விவரிக்க.

19. பழமொழி நானூறு கூறும் அறக்கருத்துகளை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

20. ‘அறிவியல் வளர்ச்சி’ பற்றிய கருத்துகளை விவரிக்க.

———————

2019 - 2020
II year

**S.No. 2061** **16 LCT 3**

(For candidates admitted from 2016 – 2017 onwards)

U.G. DEGREE EXAMINATION, NOVEMBER 2019.

Part I — தமிழ்

காப்பியமும் நாடகமும்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. அடைக்கலக் காதையில் நான்கு வேதங்களையும் நன்கு கற்றவராகக் கூறப்படுபவர் யார்?

2. மணநூல் என்று போற்றப்படுவது யாது?

3. இராமாயணத்தில் தன்னை 'ஏழை வேடன்' எனக் குறிப்பிடுபவர் யார்?

4. உலூக முனிவர் தூது சொல்ல எந்நகரை அடைந்தார்?

5. நெருப்பில் மூழ்கி 'புண்ணியர் பொன் மேனி' பெற்றவர் யார்?

6. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளலைக் குறிப்பிடுக.

7. அமுதவல்லிக்குத் தமிழ் கற்பித்தவர் யார்?

8. சங்க முனிக்கு இழிந்த சாபம் கொடுத்தவரை எழுதுக.

9. வைணவ சமயத்தை வளர்க்கப் போற்றிப் பாடப்பட்ட நூலினை எழுதுக.

10. மணிமேலைக் காப்பியம் எச்சமயக் கோட்பாட்டினை உள்ளடக்கியது?

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் இரண்டு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) அடைக்கலப் பொருளைக் காக்கின்ற சிறப்பினை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) சோழ மன்னனுக்கும், மணிமேகலைக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை விவரிக்க.

12. (அ) பரதனின் சிறப்பியல்புகளை குகன் உணர்ந்த வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கண்ணனுக்கும் விடுமருக்கும் நடந்த வாதத்தினை விளக்குக.

13. (அ) நபிகள் நாயகம் ஈத்தங்குலை வரவழைத்த அதிசயத்தினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) நீர் பிணி தீர்க்கும் வரம் பெற்றதனை எடுத்துரைக்க.



14. (அ) 'சாபம்! விமோசனம்' நாடகக் கதைமாந்தர் படைப்புக்களை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) 'தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும்' தியாக வாழ்வை ஆபுத்திரன் நாடகம் வழி எடுத்துரைக்க.

15. (அ) ஆண்டாள் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) மணிமேகலை கூறும் புரட்சிக் கருத்துக்களை விவரிக்க.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. சீவகன் விமலையார் திருமண நிகழ்வினை விவரிக்க.

17. உலூக மாமுனிவரின் தூதுக் கருத்துக்களை விளக்கியுரைக்க.

18. நந்தனார் காலச் சைவ நிலையினை மதிப்பிடுக.

19. மக்கள் புரட்சிக்கு புரட்சிக்கவியின் காதல் வித்திட்டமையை எடுத்துரைக்க.

20. சிற்றிலக்கியங்களுள் தூது, குறவஞ்சி, பள்ளு ஆகியவற்றின் கட்டமைப்பினை எடுத்தெழுதுக.

18. பிரிவாற்றாமை வழி திருக்குறள் மூலம் உணரலாகு[illegible] கருத்தினைப் புலப்படுத்துக.

19. பழமொழி வாயிலாக நீ அறியப்படும் செய்திகளை விவரி.

20. ‘கல்வியின் பயன்’ குறித்துப் பொதுக் காட்டுரை வரைக.

---



**S.No. 5056** **RLCT 4**

(For candidates admitted from 2010–2011 onwards)

U.G. DEGREE EXAMINATION, NOVEMBER 2016.

Part I — Tamil

செய்யுள் (பண்டைய இலக்கியம்), இலக்கிய வரலாறு, பொதுக்கட்டுரை

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘பொங்குதிரை பாடலின்’ ஆசிரியர் யார்?

2. பழமொழி நானூறு – குறிப்புரைக்க.

3. ‘மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே’ – விவரி.

4. ‘விழுத்தலைப் பெண்ணை விலையன் மாமடல்’ – இப்பாடலின் ஆசிரியர் யார்?

5. ‘கயமலர் உன் கண்ணாய்! காணாய்; ஒரு வயமான் அடித்தேர்வான் போல’ – இப்பாடல் வரி அமைந்துள்ள சங்க இலக்கிய நூல் எது?

6. புறநானூறு பாடிய ஆண்பாற் புலவர்கள் இருவரைக் குறிப்பிடுக.

7. திருக்குறள் எத்தனை பால்களைக் கொண்டுள்ளன?

8. பழமொழி நானூற்றின் ஆசிரியர் யார்?

9. அகநானூற்றின் மூவகைப் பாகுபாடுகளைக் குறிப்பிடுக.

10. மேன்மக்கள் – இலக்கணக் குறிப்புத் தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கு விடை தருக.

11. (அ) 'உழவு' பற்றிய செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி எழுதுக.

12. (அ) 'மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது, பல்வேறு கவர்பொருள் நாட்டத்தான், தலைமகட்குத் தோழி' கூறியவை யாவை?

(அல்லது)

(ஆ) 'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்' – இக்கூற்று உணர்த்தும் கருத்துக்களைக் குறிப்பிடுக.



13. (அ) மணமனைப் பிற்றை ஞான்று புக்க 'தோழி நன்கு ஆற்றுவித்தாய்' என்ற தலைமகற்கு சொல்லியவை யாவை?

(அல்லது)

(ஆ) தலைவிதுயர் ஆற்றாமை உணர்ந்த தோழி வரைவு கடாயது யாது?

14. (அ) வரைவிடை ஆற்றாது தோழிக்குத் தலைமகள் கூறியவை யாவை?

(அல்லது)

(ஆ) தோழியாற் குறை மறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைத்தவையைக் குறுந்தொகை வழிபுலப்படுத்துக.

15. (அ) 'வெண் தலை மாமலை சூடி' – விளக்குக.

(அல்லது)

(ஆ) 'தீயேன்தில்ல, மலை கிழவோற்கே' – ஐங்குறுநூறு வழி விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. அன்னாய் வாழிப்பத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. புறநானூறு பாடல் கருத்துக்களை நும்பாடப் பொருள் கொண்டு விவரி.